கொள்கைக் குறிப்பு

# சதுப்பு நீரில் தவழ்ந்து செல்தல்: இலங்கையில் ஒழுங்குபடுத்தல் பயனின்மை பற்றிய ஒரு விடய ஆய்வு

### இறக்குமதி வரி விலக்களிப்புத் திட்டங்கள்


## சுருக்கம்

ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளின் ஊகிக்கத்தக்க தன்மை, வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியன அவற்றின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்கு முக்கியமாகும். இவ்வம்சங்கள் இல்லாதபோது அந்நடைமுறைகள் எதிர் பார்க்கப்பட்ட பெறுபேறுகளை உண்டுபண்ணத் தவறிவிடும். அத்தகைய தெளிவற்ற நடைமுறைகள் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாகலாம். இக்கொள்கைச் சுருக்கம் தெரிவு செய்யப்பட்ட வகைப் பொருட்களுக்கான இறக்குமதி வரி விலக்களிப்புத் திட்டங்களை தற்போது ஆளுகின்ற பொறிமுறைகளை பகுப்பாய்வு செய்வதன்மூலம் இப்பிரச்சினையை முன்னிலைப்படுத்தி ஆராய்கிறது.

மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றுக்கான செலவானது உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன் மற்றும் போட்டித்தன்மை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். இலங்கையில், இறக்குமதிகளின் போது இறக்குமதி மையத்தில் அவை பலவித வரிகளுக்கு உள்ளாகும். இதனால் வரிச் சுமையும் கணிசமானதாக அமையும். இவ்வரிகளின் விளைவாக ஏற்படும் செலவு அதிகரிப்புகளை குறைப்பதற்கு அரசாங்கம் குறிப்பிட்ட இறக்குமதிப் பொருட்களின்மீது வரி விலக்களிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்கீழ் விளக்கப்பட்டவாறு, தெளிவற்ற நடைமுறைகளுக்கு இட்டுச் செல்லும் ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறைகள் இல்லாமையானது, அதிகாரிகளின் அதிகளவு தீர்மானம் மேற்கொள்ளும் தற்றுணிபிற்கு இடமளிக்கிறது. மேலும், தற்போதைய நடைமுறையானது துஷ்பிரயோகப்படுத்தலுக்கு உள்ளாகக்கூடியதாக உள்ளது. இத்திட்டங்களின்கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள்பற்றி வெளியிடப்படும் தரவுகளின் போதாத்தன்மை, துஷ்பிரயோக சம்பவங்களைக் கண்டுபிடிப்பதை சிரமமானதாக்குகிறது.


## முக்கிய கண்டறிதல்கள்

இறக்குமதி வரிகள் அரசாங்க வருவாயின் ஒரு முக்கிய மூலமாகும். இறக்குமதிப் பொருட்ளைப் பொருத்து இறக்குமதி புள்ளியில் இறக்குமதியாளர்கள் ஐந்து வெவ்வேறு வரிகளைச் செலுத்தவேண்டி ஏற்படலாம்: இறக்குமதித் தீர்வை, இறக்குமதி செஸ்வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (PAL), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) மற்றும் பெறுமதிசேர் வரி (VAT). எனவே, இவ்வரிகளிலிருந்து நிவாரணம் வழங்கும் வரிவிலக்களிப்புத் திட்டங்கள் பெரும்பாலான வியாபாரங்களுக்கு ஒரு கணிசமான செலவு மிச்சப்படுத்தலாக அமையமுடியயும். வரி ஏய்ப்பு செய்வதற்காக விலக்களிப்புகளை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்குமுகமாக விலக்களிப்பிற்கு தகைமைபெற்றிருப்பதைக்காட்ட வியாபாரங்கள் ஒரு சில நடைமுறைகளை பின்பற்றவேண்டுமென அரசாங்கம் அவற்றை வேண்டுகிறது.

எதிர்ப்பார்க்கப்படும் பயன்களை அடைவது என்ற ரீதியில் இத்திட்டங்களின் பயனுறுதித் தன்மையை குறைப்பதும் அது துஷ்பிரயோகம் செய்யப்படும் வாய்ப்பை அதிகரிப்பதுமான தற்போதைய நடைமுறைகளில் மூன்று பிரச்சினைகளை இக்கொள்கைச்சுருக்கம் காண்கிறது. இத்துறையின் உற்பத்தித்திறனுக்கு முக்கியமான பச்சை வீடுகள், சொட்டு நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் பல் சுரங்கங்கள் முதலிய விவசாய சாதனங்களுக்கான வரி விலக்களிப்புகளை குறிப்பாக உற்று நோக்குவதன்மூலம் இச்சுருக்கம் இக்குறைபாடுகளைப் பகுப்பாய்வு செய்கிறது.

### 1. தெளிவற்ற (மூடுமந்திரமான) நடைமுறைகள்.

விலக்களிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு வியாபாரங்கள் பல நிறுவனங்களிடமிருந்து அனுமதிக் கடிதங்களைப் பெறவேண்டியுள்ளது. எனினும், இவ்வனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் ஆவணப்படுத்தப்படவுமில்லை பகிரங்கமாகக் கிடைக்கக்கூடியனவாகவும் இல்லை. இதன் விளைவாக, வியாபாரங்கள் இந்நிறுவனங்களினால் வழங்கப்படும் வாய்மொழி அறிவுறுத்தல்களில் தங்கியிருக்கவேண்டியுள்ளதோடு, அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக இந்நிறுவனங்களுக்குச் செல்லவேண்டியுமுள்ளது. வெவ்வேறு நிறுவனங்களில் உள்ள வெவ்வேறு உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகி, அத்தகைய அறிவுறுத்தல்களை நம்பகத் தன்மையற்றனவாக்குகின்றன என்பதை வெறிட்டே ரிசேச் இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு காண்கிறது. ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறையொன்று இல்லாமையானது, மூடுமந்திரமான இம்முறைமையில் தங்களுக்கு வழிகாட்டக்கூடிய உயர் மட்ட அதிகாரிகளை தனிப்பட்ட முறையில் அணுகுவதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ள வர்த்தகங்களுக்கு அதே அளவு வாய்ப்பைக் கொண்டிராத புதிய வியாபாரங்களைவிட அதிகம் சாதகமாக அமைகிறது.

### 2. தீர்மானங்கள் முறையற்ற அதிகாரத்துவ தற்றுணிபிற்கு உட்படுகின்றன

அதிகாரிகளினால் இவ்விலக்களிப்புகள் அங்கீகரிக்கப்படும் நிபந்தனைகள் ஆவணப்படுத்தப்படவுமில்லை.

பகிரங்கமாகக் கிடைக்கூடியதாக்கப்படவுமில்லை. மேலும், தகைமையுடைய இறக்குமதிப் பொருட்களை பட்டியலிடும் சட்டம் அவற்றை அப்பொருட்களின் பெயரில் இனங்காண்பதேயன்றி, HS குறியீட்டினால் இனங்காண்பதில்லை.[1] அதன் விளைவாக, விலக்களிப்பிற்காக விண்ணப்பதாரிகளினதும் பொருட்களினதும் தகைமையை தீர்மனிப்பது அதற்கு பொறுப்பாகவிருக்கும் அதிகாரியின் முறையற்ற தற்றுணிபிற்கு ஆட்பட்டுள்ளது. இந்நிலைமை பெறுபேற்றின் ஊகிக்கத்தக்க தன்மையைக் குறைப்பதோடு, துஷ்பிரயோகத்திற்கும் ஊழலிற்கும் இடமளிக்கிறது.

### 3. திட்டங்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படக்கூடியவை

தற்போதைய அங்கீகரிப்பு நடைமுறையானது, அதிகாரிகளுடன் கூட்டுச்சேர்ந்து இத்திட்டங்களின்கீழ் தகைமைபெறும் பொருட்கள் தவிர்ந்த வேறு பொருட்களை இறக்குமதி செய்யக்கூடிய வரி ஏய்ப்பாளர்களினால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் உட்படக்கூடும். இலக்கிடப்பட்ட பயனாளிகள்மீது இத்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கங்களை மதிப்பிடுவதற்கும் அத்தகைய துஷ்பிரயோகங்களை கண்டுபிடிப்பதற்கும் இறக்குமதி புள்ளிவிபரங்கள் உதவக்கூடும். அத்தகைய தரவுகள் இல்லாமையானது, துஷ்பிரயோகம் செய்யப்படும் சாத்தியத்தை மேலும் அதிகரிக்கின்றது.

## ஆய்வு மேலோட்டம்

நவீன விவசாய வழக்கங்களை ஊக்குவிப்பதும் வர்த்தக ரீதியான விவசாயத்தை அதிகரிப்பதும் அரசாங்கத்தின் ஒரு நீண்டகால முன்னுரிமையாக உள்ளது. எடுத்துக்காட்டாக, 2017 வரவு செலவுத் திட்டம் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் தொழில்நுட்பங்கள் மற்றும் வழக்கங்கள் ஆகிவற்றைப் புகுத்துவதன் வாயிலாக துறைகளின் மேம்படுத்தலுக்காக விவசாயிகளுக்கும் விவசாய நிறுவனங்களுக்கும் 50% வட்டி மானியமொன்றைப் பிரேரித்தது.[2] இந்நடவடிக்கைகள் விவசாயிகள் பின்பற்றுவதற்கு மிகவும் செலவுமிக்கதான தொழில்நுட்பங்களை அவர்கள் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. சிறு விவசாயிகளுக்கு பாரிய நிலையான செலவுகள் தொழில்நுட்பத்தை பின்பற்றுவதற்கு ஒரு தடங்கலாக அமையக்கூடும். குறிப்பாக இதற்கு ஒரு கணிசமான தொகை ஆரம்ப நிறுவுதல் செலவு தேவைப்படும்போது இது ஒரு தடங்கலாக அமையும்.[3] இலங்கையில் பலவித இறக்குமதி வரிகள் இறக்குமதி செய்யப்படும் தொழில்நுட்பத்தின் செலவை மேலும் அதிகரிக்கின்றன.

நவீன விவசாய உபகரணங்களைப் பயன்படுத்துவது விவசாயிகளுக்கு நிச்சயம் பயனளிக்கும். நவீன தொழில் நுட்பத்தின் மட்டுப்படுத்தப்பட்ட பிரயோகம் விவசாய உற்பத்தித் திறன் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் அத்துறையின் ஆற்றல் ஆகிய இரண்டையும் பாதிக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாகும்.[4]

நவீன விவசாய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்க தெரிவு செய்யப்பட்ட விவசாய உபகரணங்கள் சுங்க தீர்வை, இறக்குமதி செஸ் வரி மற்றும் பெறுமதி சேர் வரி (VAT) ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கபபட்டுள்ளன (அட்டவணை 1 ஐ பார்க்க). பொருளின் HS குறியீட்டைப் பொறுத்து, இவ்வரிகளின் ஒன்றுதிரண்ட தாக்கம் இறக்குமதிப் பெறுமதியின் 50%ஐ விஞ்சுகின்றன. இது, வியாபாரங்கள் இவ்விலக்களிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான பலமான ஊக்குவிப்பை வலியுறுத்துகிறது.

அரசாங்கத்தின் தகைமையை சரிபார்த்து உறுதிப்படுத்தல் நடைமுறை சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களில் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென வியாபாரங்களை வேண்டுகிறது. இந்நடைமுறை விவசாய உபகரணங்களுக்கு மாத்திரமின்றி, விலக்களிப்புகளுக்கு தகைமையுடைய ஏனைய பொருட்களுக்கும் பொருந்தும். தகைமையுடைய விவசாய உபகரணங்கள் மற்றும் உரிய விலக்களிப்புச் சட்டத்திற்கமைவாக தேவைப்படும் அனுமதிகள் ஆகியவற்றை அட்டவணை 1 காட்டுகிறது.

வரிவிலக்களிப்புத் திட்டங்களிலிருந்து பயனடைவதற்கான வியாபாரங்களின் ஆற்றலை அழிக்கும் தற்போதைய நடைமுறையில் நிலவும் மூன்று பிரச்சினைகளை வெறிட்டே ரிசேச் ஆய்வு காண்கிறது: (1) இந்நடைமுறை வெளிப்படையற்றது (மூடு மந்திரமானது). (2) அது முறையற்ற அதிகாரத்துவ தற்றுணிபிற்கு ஆட்படக்கூடியது. (3) துஷ்பிரயோகத்திற்கு ஆட்படக்கூடியது. இப்பிரச்சினைகள் ஓர் ஆவணப்படுத்தப்பட்ட, பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய நடைமுறை இல்லாமை, தகைமைபெற்ற பொருட்கள் HS குறியீட்டினால் இனங்காணப்படாமை மற்றும் விலக்களிப்புத் திட்டங்களினால் வெளியிடப்பட்ட இறக்குமதி புள்ளிவிபரங்களின்மை ஆகியவற்றினாலேயே எழுகின்றன.

### 1. தெளிவற்ற (மூடுமந்திரமான) நடைமுறை.

முதல் தடவை அல்லது புதிய இறக்குமதியாளர்கள் வரி விலக்களிப்பிற்கு தகுதி பெறுவதற்கான அனுமதிக் கடிதங்களை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் தொடர்பான உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (i) தகைமை நிபந்தனைகள், (ii) தகைமையுடைய பொருட்களின் HS குறியீடு மற்றும் (iii) சான்றுகளாகத் தேவைப்படும் ஆவணங்கள் ஆகியன தொடர்பான தகவல்கள் ஆவணப்படுத்தப்படவுமில்லை, பகிரங்கமாகக் கிடைக்கக் கூடியனவாகவும் இல்லை. சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் வெளியிடப்படும் வர்த்தமானிகள் மற்றும் கட்டளைகள் ஆகியன பொருட்கள் மற்றும் அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய நிறுவனங்ளின் பட்டியல் ஆகியன தொடர்பாக அடிப்படைத் தகவல்களை மாத்திரமே வழங்குகின்றன (அட்டவணை 1 இல் விளக்கப்பட்டவாறு).

இத்திட்டத்தின்கீழ் விலக்களிப்புகளுக்கான கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும் மூன்று நிறுவனங்களும் (விவசாய அமைச்சு, நிதிக் கொள்கைத் திணைக்களம், சுங்கத் திணைக்களம்) தேவைப்படும் ஆவணங்கள், தகைமை பெறுவதற்கான நிபந்தனைகள் அல்லது விலக்களிக்கப்பட்ட பொருட்களுக்கான HS குறியீடு ஆகியன பற்றிய

## கொள்கைக் குறிப்பு

அட்டவணை 1: சுங்கத் தீர்வை, இறக்குமதி செஸ் வரி மற்றும் வற் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்ட விவசாய உபகரணங்கள் மற்றும் இவ்விலக்களிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனுமதிகள்

| விலக்கு | உபகரணம் | சட்டத்தில் விளக்கப்பட்டவாறு விலக்களிப்புகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனுமதிகள் |
|---|---|---|
| சுங்கத் தீர்வை[5] | ▪ காலநிலை நிலையங்கள்,<br>▪ பச்சை வீடுகள்,<br>▪ பல் சுரங்கங்கள்,<br>▪ பீய்ச்சி/தெளித்தல் முறைமைகள்,<br>▪ சொட்டு நீர்ப்பாசன முறைமைகள்<br>▪ வளமாக்கி முறைமைகள்,<br>▪ நீர் பயிர்ச்செய்கைமுறை,<br>▪ இலைதழை படை,<br>▪ குட்டை லைனர்,<br>▪ வலையமைப்பிற்கான நிழல். | 1) விவசாய அமைச்சின் செயலாளரிடமிருந்து பரிந்துரைக் கடிதம்,<br>2) சுங்கத் திணைக்கள பணிப்பானளர் நாயகத்திடமிருந்து அனுமதி. |
| இறக்குமதி செஸ்[6] | ▪ காலநிலை நிலையங்கள்,<br>▪ பச்சை வீடுகள்,<br>▪ பல் சுரங்கங்கள்,<br>▪ பீய்ச்சி/தெளித்தல்முறைமைகள்,<br>▪ சொட்டு நீர்ப்பாசன முறைமைகள்,<br>▪ வளமாக்கி முறைமைகள்,<br>▪ இலைதழை படை,<br>▪ குட்டைலைனர்,<br>▪ வலையமைப்பிற்கான நிழல். | 1) விவசாய அமைச்சின் செயலாளரிடமிருந்து பரிந்துரைக் கடிதம்,<br>2) நிதிக் கொள்கைதிணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதி. |
| வற்[7] | ▪ பச்சை வீடுகள்,<br>▪ பல் சுரங்கங்கள்,<br>▪ பச்சை வீடுகள் நிர்மாணத்திற்கான மூலப்பொருட்கள். | 1) விவசாய அமைச்சின் செயலாளரிடமிருந்து பரிந்துரைக் கடிதம்,<br>2) சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதி. |

விபரங்களைத் தருவதில்லை. பொறுப்பதிகாரியின் அல்லது விடுவித்தல் முகவர்கள் அல்லது சுங்க வீட்டு முகவர்கள் முதலிய வேறு மூன்றாம் தரப்பினர் முதலியோரினால் வழங்கப்படும் வாய்மொழி வழிகாட்டுநெறிகளையே இறக்குமதியாளர்கள் நம்பியிருக்க வேண்டும். இத்தெளிவில்லாத் தன்மை பின்வரும் பாதகமான விளைவுகளுக்கு இட்டுச் செல்கிறதென்று வெறிட்டே ரிசேச் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வு வெளிப்படுத்தியது.

- **முரணான மற்றும் நம்பகமற்ற வாய்மொழி அறிவுறுத்தல்களை நம்பியிருத்தல் வியாபாரங்களை இடருக்குட்படுத்துகிறது.**

இவ்வாய்வின்போது பேட்டிகாணப்பட்ட விவசாய இறக்குமதியாளர்கள் வெவ்வேறு நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து தமக்குக் கிடைக்கப்பெற்ற வாய்மொழி அறிவுறுத்தல்கள் பற்றி முரண்பட்ட அறிக்கைகளை வழங்கினர். விலக்களிப்பிற்கு இரண்டாவது நிறுவனமொன்றின் அங்கீகாரம் தேவையில்லையென்று சில நிறுவனங்கள் கூறியபோது, பின்னைய நிறுவனங்கள் தமது அங்கீகாரம் அவசியமென வலியுறுத்தின. இவ்வகையான முரண்பட்ட தகவல்கள் இறக்குமதியாளர்கள் சரியானதும் நம்பகமானதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கான சான்றுகளாகும். மேலும், இவ்விபரங்கள் வாய்மொழி மூலமாகக் கிடைக்கப் பெறுவதனால், அத்தகவல்கள் பற்றி மூன்றாம் தரப்பினர் கேள்வியெழுப்பினால் அவற்றை சரியென உறுதிப்படுத்த முடியாதபோது வியாபாரங்கள் பெரும் இடருக்குள்ளாகின்றன.

- **நேரத்தையும் ஏற்படும் செலவையும் அதிகரிக்கின்றது**

உரிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டு வலைத்தள மேடை வாயிலாக கிடைக்கக் கூடியதாக ஆக்கப்படாமையினால், தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வியாபாரங்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு

## கொள்கைக் குறிப்பு

நேரில் விஜயம் செய்ய வேண்டியுள்ளது. அங்கு செல்லும்போது உரிய அதிகாரி இல்லாதிருப்பதும் தாமதத்ததை ஏற்படுத்தும். ஏனெனில், இந்நடைமுறை ஆவணப்பத்தப்படாமையினால், ஏற்றுமதியாளருக்கு உதவுவதற்கு அந்நிறுவனத்திலிருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் முடியுமாக இருக்கும். அதன் விளைவாக, தேவையான தகவல்களையும் பின்னர் அனுமதிகளையும் பெற்றுக்கொள்வதில் வியாபாரங்கள் தேவையற்ற அளவு நேரத்தைச் செலவிடக்கூடும். இந் நடைமுறையில் சம்பந்தப்பட்டுள்ள மூன்று நிறுவனங்களும் கொழும்பில் அமைந்திருப்பதால், மேல் மாகாணத்திற்கு வெளியே அமைந்திருக்கும் வியாபாரங்களுக்கு எடுக்கும் நேரமும் ஏற்படும் செலவும் இன்னும் அதிகமாக இருக்கும்.

**தற்றுணிபுத் தீர்மானங்கள்** வெளியிடப்பட்ட தகைமை நிபந்தனைகளும் உரிய HS குறியீடுகளும் இல்லாமையானது, விண்ணப்பதாரிகளினதும் பொருட்களினதும் விலக்களிப்பிற்கான தகைமையைத் தீர்மானிப்பதில் அதிகாரிகளின் தற்றுணிபிற்குக் கணிசமான இடம் வழங்குகின்றது. இது, வியாபாரங்களை தேவையற்ற தொல்லைகளுக்கு ஆளாக்குவதோடு, ஊழலுக்கும் இடமளிக்கின்றது. அதிகாரிகளின் அதிகளவு தற்றுணிபிற்கு உட்படும் தீர்மானங்கள் விளைவுகளின் ஊகிக்கக்கூடிய தன்மையைக் குறைத்துவிடுகின்றன. அதிகாரத்துவ தற்றுணிபுகள் புதிய வியாபாரங்களோடு ஒப்பிடுகையில், உயர் மட்ட அதிகாரிகளுக்குத் தெரிந்த மற்றும் நன்கு வலையமைக்கப்பட்ட தற்போய வியாபாரங்களுக்குச் சாதகமாகவே செயல்படுகின்றன.

வியாபாரங்கள் செலுத்தவேண்டியுள்ள வரிகள் அரசாங்கத்தினால் HS குறியீடு மூலம் வெளியிடப்படுகின்றன. இறக்குமதிப் புள்ளியில் வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள குறித்த பொருட்களை இனங்காண்பதற்கு HS குறியீட்டைப் பயன்படுத்துவது மிகத் துல்லியமாக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வியாபாரங்களுக்கு இடமளிக்கும். வியாபாரங்ளுக்கு விலக்களிப்பொன்று, அதாவது விலக்களிப்பின் உண்மையான பண ரீதியான பயன் கிடைக்காது என்றபோது, அவை வரிகளை கணிப்பிட்டு, அப் பொருளை இறக்குமதி செய்வதா என்ற தீர்மானத்தை மேற்கொள்ள முடியும். மேலும், அப்பொருளின் HS குறியீட்டை முன்கூட்டியே அறிந்திருப்பது பெறுபேற்றின் ஊகிக்கக்கூடிய தன்மையை மேம்படுத்துவதோடு, இறக்குமதிப் புள்ளியில் அப்பொருளின் விலக்களிப்பிற்கான தகைமை பற்றி சுங்க அதிகாரிகளோடு ஏற்படும் நீண்ட விவாதங்களை தடுக்கும்.

இலங்கையில், பட்டியலிடப்பட்டப் பொருட்களின் உரிய HS குறியீட்டை கண்டறிவது சிரமமானதாக உள்ளது. உதாரணமாக, இலங்கைச் சுங்கத்தினால் வழங்கப்பட்ட HS குறியீட்டை தேடும் இணைய வசதியைப் பயன்படுத்தி, தகுதிவாய்ந்த பொருட்களின் HS குறியீட்டைக்

அட்டவணை 2: ஏனைய நாடுகளில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயப் பொருட்களை இனங்காண்பதற்கென ஒதுக்கப்பட்ட தேசிய மட்ட HS குறியீடுகளுக்கான உதாரணங்கள்

| நாடு | பொருள் விபரம் | HS குறியீடு |
|---|---|---|
| இந்தியா[9] | பொருத்துவதற்குத் தயாராக உள்ள நிலையிலான பச்சை வீடுகள் | 9406.00.11 |
| | ஏனைய பச்சை வீடுகள் | 9406.00.19 |
| | விவசாய/வீட்டுத் தோட்ட வேலைகளுக்கான கருவிகள் | 8424.81.00 |
| தாய்லாந்து[10] | சொட்டு நீர்பாசன முறைமைகள் | 8424.82.10 |
| | இயந்திர மற்றும் அனல் உபகரணம் பொருத்தப்பட்ட பச்சை வீடுகள்: பிளாஸ்டிக் | 9406.00.11 |
| | இயந்திர மற்றும் அனல் உபகரணம் பொருத்தப்பட்ட பச்சை வீடுகள்: வேறு | 9406.00.19 |
| பாகிஸ்தான்[11] | பிளாஸ்டிக் மூடல் மற்றும் இலைதழை படை | 3920.10.00<br>3926.90.99 |
| | பொருத்து பச்சை வீடு | 9406.10.10<br>9406.90.10 |
| | பூச்சி எதிர் வலை | 5608.19.00 |
| | நிழல் வலை | 5608.90.00 |
| ஐக்கிய அமெரிக்கா[12] | விவசாய அல்லது வீட்டுத்தோட்ட நீர்ப்பாசன உபகரணம், தான் தாங்கி மத்திய அச்சு | 8424.82.10 |
| | பச்சை வீடுகள் | 9406.90.00 |
| வியட்நாம்[13] | இயந்திர மற்றும் அனல் உபகரணம் பொருத்தப்பட்ட பச்சை வீடுகள் | 9406.10.10 |
| | சொட்டு நீர்பாசன முறைமைகள் | 8424.82.10 |
| | விவசாய அல்லது வீட்டுத்தோட்ட தெளிப்பான்கள் | 8424.20.21 |
| ஜப்பான்[14] | விவசாய பச்சை வீடு | 9406.00.09 |
| | விவசாய அல்லது வீட்டுத்தோட்ட தெளிப்பான்கள் | 8424.41.00 |

*மூலம்: அந்நாடுகளின் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவன வலைத்தளங்கள்*

கண்டறிவதற்காக வெறிட்டே ரிசேச் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவ்வித அர்த்தபூர்வமான பெறுபேறுகளையும் தரத் தவறிவிட்டன.[8] சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் (உ.ம்.: விவசாய அமைச்சு, நிதியமைச்சு மற்றும் இலங்கை சுங்கம்) உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு HS குறியீடு மூலமான பொருள் பட்டியலை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தோல்வியுற்றன. எனினும், தெரிவுசெய்யப்பட்ட ஒருசில நாடுகளில் உள்ள சம்பந்தப்பட்ட சுங்கத் தரவுத் தளங்களில் பொருள் விபரம் மூலம் இதேபோன்று மேற்கொள்ளப்பட்ட தேடுதல் காத்திரபூர்வமான பெறுபேறுகளை தந்தது (அட்டவணை 2). வரி விலக்களிக்கப்பட்ட குறிப்பிட்ட பொருட்களை இனங்காண்பதற்கு தேசிய மட்ட HS குறியீடுகள் இல்லாமையானது, அப் பொருள் அச் சட்டத்தின் கீழ் வரிவிலக்களிப்பிற்கு தகுதி பெற்றதா என்பதைத் தீர்மானிப்பதை பொறுப்பதிகாரியிடம் விட்டுவிடுகிறது. இந் நெகிழ்வுத் தன்மையானது துஸ்பிரயோகம் செய்யப்படுவதற்கு வாய்ப்பானதாக அமைகிறது.

### 2. துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகக்கூடிய திட்டங்கள்

ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறை ஒன்று இல்லாமையால், வரிவிலக்களிப்புக்கான ஒரு கோரிக்கை அங்கீகரிக்கப்படும் சாத்தியத்தை தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணி அதிகாரிகளின் தற்றுணிபேயாகும். மூடுமந்திரமானதும், நம்பகத்தன்மையற்றதும், கால விரயமானதுமான அத்தகைய நடைமுறைகள் இறக்குமதியாளர்கள் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளோடு தமக்குள்ள தனிப்பட்ட நன்மதிப்பு/ செல்வாக்கு மற்றும் உறவு ஆகியவற்றைப் பயன்படுத்தி அதனைச் சமாளிப்பதற்கு அவர்களைத் தூண்டுகிறது. மேலும், இறக்குமதி வரிகளிலிருந்து தமது பொருட்களுக்கு விலக்களிப்பு பெறுவதன் மூலம் இறக்குமதியாளர்கள் சேமிக்கக் கூடிய தொகை மிகப் பெரியதாகும். இறக்குமதியாளர்களுடன் நடத்தப்பட்ட நேர்முகங்களின்படி, பச்சை வீடானது, பச்சைவீடு தவிர்ந்த ஏனைய பொருட்களையும் உள்ளடக்கும் "ஏற்கெனவே பொருத்தப்பட்ட கட்டமைப்புகள்" என்ற விரிவான பிரிவின்கீழ் அடங்குகின்றன. ஓர் ஆவணப்படுத்தப்பட்ட நடைமுறை அல்லது மேற்பார்வை இல்லாமை அத்தகைய சூழ்நிலைகளில் கருதப்பட்ட பயனாளிகள் தவிர்ந்த ஏனைய தரப்பினர் இத்திட்டங்களின்கீழ் வேறு பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் இத்திட்டத்தை துஸ்பிரயோகம் செய்யத் தூண்டுகிறது.

இவ்விலக்களிப்புத் திட்டத்தினால் வெளியிடப்படும் இறக்குமதிப் புள்ளிவிபரங்கள் இல்லாமையினால், துஸ்பிரயோகத்தைக் கண்டுபிடிப்பது சிரமமாகும். இறக்குமதிப் புள்ளி விபரங்களைக்கோரி சமர்ப்பிக்கப்பட்ட தகவல் பெறுவதற்கான உரிமை விண்ணப்பத்திற்கு இலங்கை சுங்கத் திணைக்களத்திடமிருந்து (SLC) கிடைக்கப்பெற்ற பதில் வரி விலக்களிப்புத் திட்டங்களின்கீழ் செய்யப்பட்ட இறக்குமதிகள் தொடர்பாக அவர்கள் புள்ளிவிபரங்களை பேணுகின்றனரா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது. RTI விலக்களிப்புத் திட்டத்தைக் குறிப்பிடுவதோடு, சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பட்டியலிடப்பட்டவாறு பொருட்களின் பெயர்களை வழங்குகின்றது. RTI விண்ணப்பத்திற்கான[15] தனது பதிலில் இலங்கை சுங்கம் பட்டியலிடப்பட்டப் பொருட்களின் HS குறியீடுகளை அக்கோரிக்கை உள்ளடக்காததால், தகவல்களை வழங்க முடியாதுள்ளதென்று குறிப்பிட்டது. முன்னைய விவாதத்தில் குறிப்பிடப்பட்டவாறு, வரிவிலக்களிக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் பொதுமக்களுக்கு தற்போது அவற்றின் பெயர் மூலமே கிடைக்கக் கூடியதாக உள்ளது, HS குறியீடு மூலம் அல்ல. அனுமதி வழங்கும் நிறுவனங்களுக்கும் (விவசாய அமைச்சு மற்றும் நிதிக் கொள்கைத் திணைக்களம்) இந்த HS குறியீடுகள் தெரியாது. எனவே, இறக்குமதி செய்யப்படும் ஒரு பொருள் இறக்குமதி புள்ளிகளில் வரி விலக்களிப்புகளுக்கு தகுதியுடையதா என்பதைத் இறுதியாகத் தீர்மானிக்கும் இலங்கைச் சுங்கத் திணைக்களம் தான் அமுலிலுள்ள வரி விலக்களிப்புத் திட்டங்களின்கீழ் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் பொருட்கள் சம்பந்தப்பட்ட HS குறியீடுகள் பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கும் ஒரே அதிகாரபீடமாகும்.

இறக்குமதிப் புள்ளிவிபரங்கள் கிடைக்கக்கூடியதாக இல்லாதிருப்பதாலும், பொருட்கள் HS குறியீடுகள் மூலம் இனங்காணப்படாததாலும், துஸ்பிரயோகம் இடம்பெறுகிறதா என்தையும் எந்தளவிற்கு அது இடம்பெறுகிறது என்பதையும் கண்டுபிடிப்பது சாத்தியமல்ல. இடம்பெறக்கூடிய மீறல்களை கண்டுபிடிக்க முடியாதிருப்பது, துஸ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்தவென ஏற்படுத்தப்பட்ட ஒரு முறைமையில் நிலவும் ஒரு பெரும் குறைபாடாகும். மேலும், தற்போதுள்ள முறைமை அதன் இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு, குறிப்பாக பெரும் செலவு பிடிக்கும் உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாத விவசாயிகளுக்கு வரி விலக்களிப்பிற்கான சம வாய்ப்பை வழங்குவதில்லை.

---

வெறிட்டே ரிசேச் நிறுவனத்தின் பொருளாதார ஆராய்ச்சி அணி இவ்வாய்வினை தொகுத்தது.

கொள்கை சுருக்கம் வினுரா ஜயசிங்கவிடமிருந்து ஆராய்ச்சி உறுதுணையோடும், வென்யா டீ சில்வாவிடமிருந்து பதிப்பாசிரியர் உறுதுணையோடும் சச்சிந்த பெர்னாண்டோவினால் ஆக்கப்பட்டது. ஒட்டுமொத்த ஆராய்ச்சி மற்றும் பதிப்பாசிரியர் மேற்பார்வை சுபாசினி அபேசிங்க மற்றும் நிசான் டீ மெல் ஆகியோரினால் செய்யப்பட்டது.

இவ்வணி இரத்தினபுரி மாவட்டத்தில் கள ஆராய்ச்சிக்கு வசதியேற்படுத்தியமைக்காக சப்ரகமுவ வர்த்தகச் சங்கத்திற்கும், வழங்கிய ஆதரவு மற்றும் கருத்துகளுக்காக இலங்கை வர்த்தக சங்கம் மற்றும் பிராந்திய வர்த்தக சங்கங்கள் (பட்டியல் கீழே) ஆகியவற்றுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

## கொள்கைக் குறிப்பு

### ENDNOTES


1. வகைப்படுத்தல் குறியீட்டின் இசைவுபடத்தப்பட்ட முறைமை (HS) - இசைவுபடுத்தப்பட்ட வகைப்படுத்தல் குறியீட்டு முறைமையானது, ஏற்றுமதிகளின் பொருள் அடர்த்தி மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்றாகாக உலக சுங்க நிறுவனத்தினால் விருத்தி செய்யப்பட்டது. பொருள் வகைப்படுத்தலில் உள்ள விபரங்களின் அளவு குறித்துரைக்கப்படும் ர்ளு அளவில் தங்கியுள்ளது. உதாரணமாக, 4 இலக்க மட்டத்தில் வகைப்படுத்தப்பட்ட ஒரு பொருள் 2 இலக்க மட்டத்தில் வகைபபடுத்தப்பட்ட ஒரு பொருளைவிட அதிகம் விசேடமதானதாகும். உதாரணமாக, பால் உற்பத்திப பொருட்கள் ர்ளு 04 என இரண்டு இலக்கங்களில் வகைப்படுததப்படும்போது, அடர்த்தியாக்கப்பட்ட பால் 0402 என 4 இலக்கங்களில் வகைப்படுத்தப்படும். இறக்குமதிகள் இசைவாக்கப்பட்ட முறைமைக்கமைய ஒரு குறியீட்டினால் இனங்காணப்படும். சர்வதேச வகைப்படுத்தல் 6 இலக்கங்கள்வரை செல்கிறது. நாடுகள் தேசிய மட்டத்தில் 2 அல்லது 4 சேர்த்துக்கொள்வதன் மூலம் இதனை மேலும உப பிரிவுகளாகப் பிரிக்க முடியும்.
2. Ministry of Finance. Budget speech 2017.
3. I. Abara and S. Singh. Ethics and Biases in Technology Adoption: The Small Farm Argument. 1993. Technological Forecasting and Social Change Vol. 43,pp. 289-300.
4. Athukorala,Premachandra,et al.,eds. The Sri Lankan Economy: Charting A New Course. Asian Development Bank (2017). Available at: https://www.adb.org/sites/default/files/publication/373316/sri-lankan-economy.pdf, [last accessed 27 March 2018].
5. 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான 02/2017ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புக் கட்டளையின் பின்னிணைப்புII. http://www.treasury.gov.lk/documents/10181/46038/2006- இ.ல 2017 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2006/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி. 42+Revenue+Protection+Order+No.+022017/ff23cb72-3bbd-4667-bd03-b87c31f30b47?version=1.0, [last accessed 27 March 2018].
6. இலங்கைச் சுங்கம், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழான கட்டளை,28 ழேளநஅடிநச 2017,available at; http://www.customs.gov.lk/public/files/tariff/cess2018.pdf, [last accessed 27 March 2018].
7. Inland Revenue Department.Value Added Tax (VAT) - Schedule of Exempt Goods and Services. 01 November 2016. Available at: http://www.ird.gov.lk/en/Lists/Latest%20News%20%20Notices/Attachments/92/Schedule%20of%20Goods%20or%20Services%20Exempted%20from%20VAT.pdf, [last accessed 27 March 2018].
8. Sri Lanka Customs. HS Code Finder. Available at: http://www.customs.gov.lk/business/hsfinder, [last accessed 27 March 2018].
9. Department of Commerce,Government of India. Export Import Data Bank. Available at:http://commerce.nic.in/eidb/searchq.asp?fl=Icomq.asp, [last accessed 27 March 2018].
10. Thai Customs. Integrated Tariff Database. Available at:http://igtf.customs.go.th/igtf/en/main_frame.jsp?lang=en&left_menu=menu_integrated_tariff_search, [last accessed 27 March 2018].
11. PkRevenue.com. FBR updates customs duties on import of goods by agri sector. Available at: http://www.pkrevenue.com/customs/fbr-updates-customs-duties-on-import-of-goods-by-agri-sector/, [last accessed 27 March 2018].
12. U.S. International Trade Commission. U.S. International Trade Commission. Available at: https://hts.usitc.gov/?query=8424, [last accessed 27 March 2018].
13. Vietnam Customs. Tariff Database. Available at: https://www.customs.gov.vn/SitePages/Tariff-Search.aspx?language=en-US, [last accessed 27 March 2018].
14. Japan Customs. Japan’s Tariff Schedule as of January 1 2018. Available at: http://www.customs.go.jp/english/tariff/2018_1/index.htm, [last accessed 27 March 2018].
15. சுங்க இறக்குமதித் தீர்வை, வெற் மற்றும் இறக்குமதி செஸ் வரி ஆகியவற்றுக்கான விலக்களிப்புத் திட்டங்களின்கீழ் விவசாய உபகரணங்களின் இறக்குமதி தொடர்பான வெறீட்டே ரிசேச் (பிறைவேற்) லிமிட்டெட்டின் தகவல் கோரிக்கைக்கான இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பதில் 2017 டிசெம்பர் 08 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது.